முருகப்பெருமான் துணை

**மகான் தானந்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.12.2022**, சனிக்கிழமை

1. தவமாக மக்களினை தேற்ற
   தனிப் பெருங் கருணை வடிவாக
   அவதாரம் புரிந்த அரங்கனே
   அப்பனே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது தேள் திங்கள்
   குறைவிலா மூவையீர் திகதி காரிவாரம்
   (சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 17 ம் நாள் 03.12.2022, சனிக்கிழமை)
   தெரிவிப்பேன் அனுகூல ஆசிதனை
   தேசிகனுக்கு தானந்தர் யானும்
3. யானுமே உலகோர் நலமுறவே
   உயர்வழியாம் அரங்கன் நெறியை
   ஞானமாக மக்கள் பயில உரைப்பேன்
   நம்பிக்கை வைத்து ஏற்று வர
4. வருகவே மக்களிடை நல்விதம்
   வளர்ச்சி நிலைகளாக மாறி
   தரும குணம் பெருகி நிற்கும்
   தயவுகளும் கூடி இனிதே
5. இனிதே ஞானிகளும் அனுகி
   இணையிலா வரம் தரும்படி
   கனிவான வாழ்வாக மாறும்
   கருணைமிக்க அரங்கன் அருட்பார்வை
6. அருட்பார்வை பெற்ற மக்கட்கு
   ஆபத்து இடைகண்டமிலா
   அருள்மிக்க ஞான வாழ்வாக
   ஆயுள் கீர்த்தி அனைத்தும் ஓங்கும்
7. ஓங்கும் பாதுகாப்புமிக்க வாழ்வாக
   ஓங்காரனின் துணை குறையாத
   எங்கும் எதிலும் ஆற்றல் பெருக
   இயம்பிடுவேன் ஞானவாழ்வாக மாறும்
8. மாறுதலை தரும் ஞானி
   மாதவசி அரங்கன் திருவடி
   ஆறுதலும் கடைத்தேற்றமும்
   அருளும் ஞானத்திருவடியாகும்
9. ஆகவே அனைவரும் அகலா
   அனுகி சரணடைவு கொண்டு
   செகம் வெல்லும் வல்லமையும்
   சித்திகளும் தந்தருள்வாய் என

10. என வேண்டி உயர்தீட்சை
ஏற்றுமே ஞானம் பயில
ஞானவான் தனவான் என்கின்ற
நல்நிலை பலவகை தேறி

11. தேறியே அரங்கன் அவதார
தேற்றமாம் உலக மாற்றத்திற்கு
உரியவர்களாகி ஞானிகளாவர்
உரைத்திட்ட அனுகூல ஆசி முற்றே

–சுபம்–